**சுருக்கம்**

பாசனம் – திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டத்திலுள்ள அமராவதி பழைய பாசனப் பகுதிகளுக்கு 2.9.2011 முதல் 30.9.2011 வரை அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணித் (க்யூ.1) துறை**

**அரசாணை (வாலாயம்) எண்.376** **நாள்: 31.08.2011**
**ஆவணி–14, திருவள்ளுவராண்டு 2042**
**படிக்கப்பட்டது:**

நீர்வள ஆதாரத் துறை, கோயம்புத்தூர் மண்டலத் தலைமைப் பொறியாளரின் கடித எண்.தொநுபி/உசெபொ.1/உபொ.1/கோ. 1593/2011, நாள் 29.8.2011.

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நீர்வள ஆதாரத் துறை, கோயம்புத்தூர் மண்டலத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில், அவரது செயற்குறிப்பினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம் மற்றும் கரூர் மாவட்டத்திலுள்ள அமராவதி பழைய பாசனப் பகுதியின் 21,867 ஏக்கர்களுக்கு 2.9.2011 மற்றும் 3.9.2011 முடிய 2 நாட்களுக்கு வினாடிக்கு 1000 கனஅடி வீதமும், 4.9.2011 முதல் 8.9.2011 முடிய 5 நாட்களுக்கு வினாடிக்கு 700 கனஅடி வீதமும், 9.9.2011 முதல் 16.9.2011 முடிய 8 நாட்களுக்கு வினாடிக்கு 550 கனஅடி வீதமும் மற்றும் 22.9.2011 முதல் 30.9.2011 முடிய 9 நாட்களுக்கு வினாடிக்கு 550 கனஅடி வீதமும் (முதல் 15 நாட்களுக்கு திறப்பு, 5 நாட்களுக்கு அடைப்பு மற்றும் 9 நாட்களுக்கு திறப்பு என்ற முறையில்) 1283.04 மில்லியன் கனஅடி தண்ணீரை செப்டம்பர் மாதத்தில் 2.9.2011 முதல் 30.9.2011 வரை அமராவதி அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எம். சாய் குமார்**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, கோயம்புத்தூர்.
மாவட்ட ஆட்சியர், திருப்பூர் மாவட்டம், திருப்பூர்.
மாவட்ட ஆட்சியர், கரூர் மாவட்டம், கரூர்.

நகல்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5.
பொதுப்பணித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை – 5.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்.**